*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' Uduvil, Chunnakam.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 Jaffna, Friday, 6th March, 1981 No. 10

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland Rs. 35/- per year. Single issues are available at the VARANY Mission Sales Centre, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

## Fellowship Meeting of the J. I. C. C. F.

The Jaffna Inter Collegiate Christian Fellowship conducted a Fellowship Meeting at the Retreat House, Casurina Beach Karainagar on Wednesday the 4th instant. One hundred and five students and seven teachers from St. John's College, Chundikuli Girls' College, Jaffna College, Uduvil Girls' College, Central College and Vembadi Girls' High School participated at this meeting. Talks were given by Rev. Sam. Jeyathilakarajah and Miss. Kumudhini Rosa the General Secretary of the All Ceylon Student Christian Movement. The programme closed at 5-30 p. m. with a service led by Rev. Sam Jeyatkilakarajah.

## Colombo CSI Youth visit Karainagar Church

A team of 20 young people from Colombo Church were in Karainagar from 20th to 2hnd of February to assist in the convention meetings of Karainagar Church. Their programme included a debate and fellowship dinner with the SCM of Jaffna College, when about sixty boys and girls joined.

The convention meeting began on Saturday with a service of devotion, followed by a Bible Study on "Discipleship". In the evening, the Colombo Church Youth met with the Women's Guild and Youth Fellowship of Karainagar Church to share their experiences in Evangelistic and social service activities in Colombo city. At the public meeting which began at 5·00 p. m. in the Church compound, the Karainagar Sunday School presented a play on 'Forgiveness', and the Colombo Church Youth another play entitled "Theepak turns a New Leaf." The programme ended with a sing-song and a message by Mr. S. Thivyananthan of Colombo. The Film show planned for the evening had to be cancelled due to power failure, much to the disappointment of the large gathering.

On Sunday morning the Colombo Youth led the first part of the Service of Holy Communion and Miss. Shereena Gnanaratnam preached the Sermon. A parish meeting followed to bid farewell to the young visitors from Colombo.

## A Rt. Rev. Lady Moderator in Canada

The United Church of Canada elected the Rev. Mrs. Lois Wilson as the moderator for the biennium 1980 — 82 at the 28th General Council Meeting held recently. She was Associate Minister of a Church in Kingston where her husband is Senior Minister. She was ordained in 1965 and was a President of the Canadian Council of Churches. She won on the third ballot over seven other candidates including another woman.

## 34th Jaffna Diocesan Council Sessions

O *An Endowment Fund* to be raised to maintain the "Morning Star". The Diocesan Priorities Committee to set about the establishment of this Fund initially with a request from each Institution for a Consolidated Fund for five years as Morning Star quota.

O *An Extension of the Boys' Home Work* be considered in view of the increased numbers seeking admission to the present 'Home' at Manipay.

O It was reported that the land available at *Cheddikulam* for the *Church Centre* has already been purchased.

O It was noted that *Rev. S. S. Arulampalam,* our Colombo Church Presbyter has been chosen to represent the NCC of Sri Lanka at the CCA Assembly in Bangalore in May this year.

O The services of *Rev. E. D. Rasaratnam* and *Rev. N. Kathiravelu* have been extended till the end of 1981. *Mr. Daniel Thiagarajah* has been appointed Assistant Worker in Colombo from 1-5-81. Messers E. P. Solomons and T. Thevanesan have been selected as Ministerial candidates for training at Arasaradi, Madurai.

O That *a Director of Music* be appointed to be in charge of Church music and that songs taught by the music committee be sung in Churches for 15 minutes before the Sunday Morning Service.

**Election of Office Bearers :**

*Secretary* : Rev. Sam Thampoe
*Treasurer* : Mr. S. S. Selvaduraj
*Executive Committee* (to fill vacancies)
Clergy : Rev. D. R. Ambalavanar and Rev. S.P. Jeyasingam
Laity : Dr. J. S. Navaratnam, Mr. J. M. Sabaratnam, Mr. A. Kadirgamar

Synod :

*Clergy* : Rev. D. R. Ambalavanar and Rev. S. S. Arulampalam
*Laity* : Messers S. S. Selvadurai J. M. Sabaratnam, A. Rajasingam and Miss C. V. Selliah

Morning Star :

English Editor :
Mr. C. E. Rajasingam
Assistant :
Rev. S. N. Sugunananthan
Tamil Editor :
Rev. N. W. G. Sugunarajah
Assitant :
Mr. S. Jebanesan

Medical Board : (to fill vacancies)
Prof. J. B. Selliah,
Mr. C. J. Eliathamby and
Dr. P. Arulanantham.

*JDCSI*

## Ordination Service

Two Workers of the Jaffna Diocese of the Church of South India were ordained by the Rt. Rev. D. J. Ambalavanar, the Bishop of the JDCSI at the Cathedral Church Vaddukoddai on 28-2-81 at 7-30 a. m.

Mr. S. C. Arnold, Worker at Delft was ordained as Deacon and Rev. A. Jeyakumaran Worker at Chankanai was ordained Presbyter.

Mr: S. C. Arnold is the son of the late Rev. J. V. J. Arnold, a Presbyter of the JDCSI of revered memory and Mrs. Arnold of Manipay. Rev. A. Jeyakumar is the son of Mr. W. G. Annappah, who was a teacher under the Mission and till recently one of our Workers and Mrs. Annappah of Navaly.

## "A Bruised Reed He will not Break

*( The text of the Sermon preached at the Ordination Service on 28-2-81 )*

*The Rev. (Dr.) Victor Premasagar* who was the preacher at the Ordination Service on 28-2-81 said that when God calls a person for His task, He does not call him on the strength of that person's ability but on his obedience to submit himself to the power of the Spirit.

Presbyters, like the prophets, may be very ordinary people but when filled with the Spirit they become strong for the difficult situations they have to encounter in their ministry.

The Pastoral Ministry is one of the most difficult and complex ministries in life. The lines from Isaiah "a bruised reed he will not break, a dimly burning wick he will not quench" reminds us of a fundamental aspect of the Christian Ministry—its *sensitivity to people.*

Our Churches often abound with "bruised reeds" and dimly burning wicks". It is the duty of the presbyter not to crush the reeds or put out the "wicks". but to make the 'reeds' produce the music they were intended for, and the 'wicks' produce the light they are intended to shed on the darkness around them.

The Presbyter's task is not confined to the needs of his own people but those of the whole human family, of the "other sheep" that also have to be 'fed' There would no doubt be moments of discouragement and of despair in the life of a presbyter. He would feel at times that he "has laboured in vain and has spent his strength in nought." But the thought that his task is not his, but has been given to him by God will give him strength in his weakness and courage in his disappointments.

As the 'shepherd' of the 'sheep' he has to exercise authority but not be authoritarian, he has to be gentle but not weak, he has to 'bind' but not 'crush'.

Above all, the Presbyter is not merely one who should *wait* for his tasks to be told to him or assigned to him. He should always be on the alert to *discover his tasks* and widen the area of his operations in the light of new challenges. It is then only he can see the vision of a new heaven and a new earth and it is then that he will merit the rewaad:— "Thou art my Servant in whom I will be glorified.

## IN MEMORIAM

In Cherished And Fond Memory of

**Marjory Rosamalar Jeyasingam**

*" We miss you more as the years go by,*
*Thou be the gain,*
*ours the sorrow,*
*Live in peace where*
*Christ doth shine,*
*Thy love sustains us,*
*leading to the morrow "*

Our Dearest Amma. Acca; We miss you deeply on the 5th Anniversary of your entering into glory-March 8th.

25, Somasunderam Avenue, Chundikuli.

## IN MEMORIAM

In Loving and Grateful Memory of

**Mathurammah**

*(Beloved wife of the Rt. Rev. S. Kulandran)*

who departed this life on 8th March, 1974.

*" And God shall wipe away all their tears from their eyes; and there shall be no more death ..."*

## New Office Bearers

At the annual meeting of the Board of Directors of Jaffna College held this February, the following were elected to the three main offices :

Chairman ;
Rt. Rev. Dr. S. Kulandran
Secretary :
Mr. S. S. Selvadurai
Treasurer :
Mr. K. A. Selliah

# உதயதாரகை

## UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 141 ] 6 — 3 — 1981 [ இதழ் 10

## கிறிஸ்தவம் — பதவியா, பொறுப்பா?

கிறிஸ்தவனுயிருப்பது ஒருவனுக்குக் கிடைத்த வாய்ப்பான பதவியல்ல; அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஓர் உத்தரவாதம். இந்த அறிவுரையைத் திரும்பத் திரும்ப நாம் கேட்டிருக்கிறோம்; எனினும் அதிகமான வேளைகளில் அதன் தாற்பரியத்தை நாம் உணராதவர்களாய்ப் போனோம். ஆதலாற்றான் நமது சபைகள் வளராமற் போயின; சிறுபான்மையினராய் எவ்விடத்திலும் காட்சியளிக்கிறோம் தட்டித் தவறி ஓரிரண்டு பேரைச் சபைகள் வருடவீதம் கிறிஸ்துவண்டை இழுக்கக் கூடும். அதைத்தான் நம் புள்ளி விபரங்கள் காண்பிக்கின்றன. அதோடு நம் பங்கு முடிந்ததெனக் கொள்பவர் போல் வாளாவிருக்கிறோம்.

சென்ற வருடாந்தக் கூட்டங்களில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கலாநிதி கனம் விக்ரர் பிரேமசாகர் அவர்கள் "உம்முடைய இராச்சியம் வருவதாக" என நாம் செபிக்கும்போது அது ஒரு வெறும் விண்ணப்பமாய் இராமல் அதைச் செபிக்கும் ஒவ்வொருவரும் செய்யும் ஓர் அர்ப்பணிப்பாய் அது அமைய வேண்டியதவசியம் எனத் தாம் நடத்திய ஒரு வேதப்படிப்பில் எடுத்துக்காட்டினார்கள். உமது இராச்சியம் வருவதற்காக என்னையே நான் அர்ப்பணிக்கிறேன் என அது பொருள்பட வேண்டுமென்பது அவர்களின் கருத்து.

ஆதித் திருச்சபையிலே எருசலேமில் தரித்திருந்த அப்போஸ்தலரைத் தவிர்ந்த ஏனைய "சாதாரணக் கிறிஸ்தவர்கள்" தாம் சிதறடிக்கப்பட்ட இடமனைத்தும் சுவிசேஷ செய்தியைக் கூறி அநேகரைக் கர்த்தரிடமாய்த் திருப்பினார்கள் என நடபடிகள் நூலிற் காண்கிறோம். தென்னிந்தியாவிற் கடமையாற்றிய அத்தியட்சர் ஒருவர் தம்மிடம் திருமுழுக்குப் பெறும் ஒவ்வொருவரையும் சொல்ல வைத்த உடன்படிக்கை: "இதோ நான் கிறிஸ்தவனாகி விட்டேன்; சுவிசேஷத்தைப் பிரசங்கியாதுவிட்டால் எனக்கு ஐயோ!' என்பதாகும் எனக் கூறப்படுகிறது. மீட்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் அந்த நற்செய்தியை மற்றவர்க்கும் சொல்ல வேண்டுமென்றால் அதில் வியப்பதற்கு எதுவுமில்லை. சாதாரணமான விடயங்களில் நாம் கண்ட நலமான காரியங்களைக் குறித்துப் பிறருக்குச் சொல்கிறோமல்லவா!

"நான் பெற்ற இன்பம் வையகம் பெறுக" எனப் பக்தன் ஒருவர் பாடினார். நாமோ நாம் கண்ட இனிய அனுபவத்தைப் பிறருக்குக் கூறத் தயங்குகிறோம் இல்லையேல், "அதைக் குருமார் கூறட்டும்; நாமோ நம்பாடு பார்ப்போம்" என்பதுபோல் பேசாதிருக்கிறோம். 1980 இல் ஆரம்பமான பத்தாண்டுக் காலத்தில் "ஒவ்வொருவரும் இன்னொருவரைக் கிறிஸ்துவிடம் கொண்டு வாருங்கள்" என்ற அருமையான புத்திமதி சென்ற ஆண்டிலேயே நமக்கு முன்பாக வைக்கப் பட்டது அது கடுமையான வேண்டுகோள் அல்லவே ஒரு பத்தாண்டுக் காலத்தில் நாம் எத்தனையோ காரியங்களைச் செய்யப் போகிறோம்; எத்தனை சாதனைகளை நாட்டப்போகிறோம்? அவற்றில் இதையும் ஒன்றாகக் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் கொள்வார்களானால் அது மிகுந்த பலன் தரும்!

வருடாந்தக் கூட்டங்களில் தமது பேருரையை நிகழ்த்திய நமது அத்தியட்சர் அவர்கள் வருடத்திற்கு ஒரு புதிய சபையையாகிலும் நிறுவும் இலட்சியத்தை நம் முன் வைத்தார்கள். யாழ்ப்பாணத்திற் கப்பாலான இடங்களில் நாம் இப்போது ஆரம்பித்து நடத்தி வரும் திட்டங்கள் இது வெறும் பேச்சல்ல வெனக் காட்டுகின்றன. இந்த இலட்சியத்தை அடைவதற்குதவியாக இன்னுமோர் ஆலோசனை இக் கூட்டங்களிற் கூறப்பட்டது. ஒவ்வொரு சபையும் தன் சுற்றுப்புறங்களில் ஒரு புதிய சபையை நிறுவுவதற்கேற்ற ஒரு மையக் குழுவினரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் வேறென்னதான் இல்லாவிடினும் நமது சபைகளின் "சாதாரண கிறிஸ்தவர்கள்" இதையாவது திட்டம் பண்ணி நடத்துவது அவசியமாகும். வளரும் சபையே வாழ்வுடைய சபை "உம்முடைய இராச்சியம் வருவதாக" வென நாம் ஒவ்வொருவரும் தினமும் செபிக்கிறோம். "அதற்கு என்னை நானே தத்தம் செய்கிறேன்" எனவும் சொல்லுவோமா?

---

## தெ. இ. திருச்சபை — யாழ். அத்தியட்சாதீனம் 34ஆம் வருடாந்தக் கூட்டங்கள்

தெ. இ. திருச்சபை யாழ். அத்தியட்சாதீனத்தின் 34ஆம் வருடாந்தக் கூட்டங்கள் 1981 பெப்ரவரி மாதம் 26 தொடக்கம் 28 ஆம் திகதி வரை வட்டுக்கோட்டையில் நடைபெற்றன முதல் இரண்டு நாட் கூட்டங்களும் முறையே கனம் N. W. G. சுகுணராஜா, கனம். S. S. அருளம்பலம் ஆகியோரினால் ஆசன ஆலயத்தில் நடத்தப்பட்ட திருவிருந்து ஆராதனைகளுடன் ஆரம்பமாயின.

மூன்றும் நாட் காலை ஆராதனைக் குரு, உதவிக் குரு அபிடேகத் திருவிருந்து ஆராதனையாக அத்தியட்சர் மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்களினால் நடத்தப்பட்டது. ஆசன ஆலயத்தில் நடந்த இவ்வாராதனையில் ஆதீன சங்கத்தினராகவும், குரு அபிடேகம் பெறுவோரின் இன சனத்தார் சபையாராகவும் ஆதீனத்தின் பிற சபையாராகவும் சுமார் 300 பேர் சமுகமாயிருந்தனர். ஆராதனை மிகுந்த எழுச்சிக்குரிய சங்கீத முறைத் திருவிருந்து ஆராதனையாயமைந்தது. உதவிக் குரு அபிடேகத்தில் கால்களைக் கழுவும் ஆசாரம் பலர் மனதையும் உருக்கும் முறையில் கையாளப்பட்டது. உதவிக் குருவாக அபிடேகம் பெற்றவர் நெடுந்தீவுச் சபை ஊழியன் திரு. S. சந்திரன் ஆர்ணல்ட்; குரு அபிடேகம் பெற்றவர் சங்கானைச் சபை ஊழியன் கனம் A. ஜெயக்குமாரன்.

தென்னிந்திய திருச்சபையின் மகாசபையின் பொதுச் செயலாளரும் வருடாந்தக் கூட்டங்களிற் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டவருமான கலாநிதி கனம் விக்ரர் பிரேமசாகர் அவர்கள் இந்த ஆராதனையிற் பிரசங்கம் செய்தார்கள். ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 42ஆம் அதிகாரத்தின் முதற் சில வாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு பிரசங்கித்த அவர்கள் அபிடேகம் பெற்றவர்களைப் பார்த்துப் பின் வருமாறு புத்தியுரை கூறினார்கள்:

"இது உங்கள் வாழ்க்கையில் சிறப்புடைய ஒரு நாள். கர்த்தர் உங்களை அழைத்திருக்கிறார். இந்த அழைப்பு உங்கள் புகழுக்கான வொன்றல்ல. செல்வாக்குடைய ஒரு பதவியை உங்களுக்கு அருளுவதற்காய் அமைந்த அழைப்புமல்ல. உங்கள் சனத்தின் மத்தியிலே நீங்கள் நிறைவேற்ற வேண்டிய உத்தரவாதமுள்ள ஒரு கடமைக்கான அழைப்பு. உங்கள் ஆற்றலின் நிமித்தமாக அது உங்களுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பல்ல சிரமேற் கை வைப்பதினால் உங்களுக்கு அருளப்பட்ட ஆவியின் நிமித்தமாகவே இந்தப் பெரும் கடமைக்கு நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். சகல ஜாதியாருக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும். அதற்காகவே நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

உங்கள் வேலையில் மிகக் கடினமான அம்சம் உங்கள் ஜனங்களுக்கு மேய்ப்பனாவது. அவர்கள் தேவைகளையும் நாட்டங்களையும் அறிந்தவர்களாக, ஒரு நல்ல மேய்ப்பன் கருணையுள்ளத்தோடு தன் ஆடுகளை நடத்திச் செல்வது போல, இப்பெரிய உத்தரவாதத்தை நிறைவேற்றும்படி நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். "நெரிந்த நாணலை முறியாமலும் மங்கி யெரிகிற திரியை அணையாமலும்" இருப்பதற்குக் கவனமெடுங்கள். "இவையல்லாமல் வேறு ஆடுகளும் எனக்குண்டு" என ஆண்டவர் கூறியதை மனதிற் கொள்ளுங்கள். உங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டவர்களைப் பராமரித்து வருவதோடு வேறு ஆடுகளாகிய பிறரையும் கர்த்தரின் மந்தையில் சேர்த்துக் கொள்ளச் சிந்தையுள்ளவர்களாயிருங்கள்; அவர்களின் மீட்பைக் குறித்தும் ஆண்டவர் கரிசனையுள்ளவராயிருக்கிறார். தமது சபைக்கு மாத்திரமல்ல, தமது ஜனமாகிய உலகமனைத்துக்குமே கடவுள் உங்களைக் கொடையாக்குகிறார் என்பதை மனதிலே கொண்டிருங்கள்".

கருமக் கூட்டங்கள் யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்திலே தினமும் நடைபெற்றன. முதலாம் நாள் ஆரம்பத்திலே, தலைவர் மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்கள் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்திய பின், ஆதீனத்துடன் சம்பந்தமுடையவராயிருந்த சென்ற ஆண்டிற் காலமானவர் பெயரில் அனுதாபப் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன, மகாகனம்

### ஆதீன ஊழியர்

பண்டத்தெருப்புச் சபை ஊழியன் கனம் N. கதிரவேலு, நுணுவில் சபை ஊழியன் கனம் E. D. இராசரத்தினம் ஆகியோரின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் தமது இறையியற் படிப்புகளை முடித்து வரவிருக்கும் திரு. டானியேல் தியாகராஜா வருகிற மே மாதம் 1ஆம் திகதி தொடக்கமாகக் கொழும்புச் சபையின் உதவி ஊழியனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்தீர்மானங்கள் சமீபத்தில் நடந்த ஆதீனத்தின் வருடாந்தக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

---

ஆர்ணல்ட் லெக், மகாகனம் ரொம் கறெற், அத்தியட்சர்மார் பெயரில் அத்தியட்சர் மகாகனம் குலேந்திரன் அவர்களாலும், காலமான கனம் K. S. ஜெயசிங்கம், திருமதி E. C. லொக்வூட், திரு. M. இராசரத்தினம், திரு. P. யோனு, திரு. J. V. கதிரவேலு, கனம் S. P. விஜயரத்தினம், கனம் J. M. சிங்கநாயகம் ஆகியோரின் பேரில் முறையே கனம் N. W. G. சுகுணராஜா, செல்வி M. S. எலியாஸ், கனம் S. S. அருளம்பலம், கனம் T. S. பிரேமராஜா, கனம் E. D. இராசரத்தினம், கனம் A. C. மதனராஜ், கனம் D. R. அம்பலவாணர் ஆகியோராலும் இந்த அனுதாபப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

கருமக் கூட்டங்களில் ஆதீனத்தின் வரவு செலவுக் கணக்கு, வரவு செலவு மதிப்பு, ஐந்தொகை ஆகியனவும், ஆதீனத்தின் கீழியங்கும் குழுக்கள், உபசங்கங்கள் ஆகியவற்றின் வருடாந்த அறிக்கைகளும் கணக்கு விவரங்களும் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. இக்குழுக்களின் பணிகள் சம்பந்தமாகப் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பிரதம அதிதியாக வருகை தந்திருந்த கலாநிதி கனம் விக்ரர் பிரேமசாகர் அவர்கள் முதல் இரண்டு நாட்களும் காலையில் "உமது இராச்சியம் வருவதாக", "கடவுள் இராச்சியத்திற்கான துணிவு" ஆகிய தலையங்கங்களில் வேதப் படிப்பு நடத்தினார்கள். இவை யாவராலும் மிக மெச்சப்பட்டன. முதல் நாள் சாயந்தரக் கூட்டத்தில் கலாநிதி பிரேமசாகர் அவர்கள் "சபையின் தன்மை" என்ற விடயத்தில் உரையாற்றினார்கள். இரண்டாம் நாள் சாயந்தரம் ஆதீன சங்கத்தினர், சபைகளின் நிர்வாகக் குழு அங்கத்தினர், வாலிபர் ஐக்கியம், பெண்கள் ஐக்கியம் ஆனவற்றின் உத்தியோகத்தர் ஆகியோர் சேர்ந்த ஒரு பகிரங்கக் கூட்டத்தில் கலாநிதி பிரேமசாகர் உரை நிகழ்த்தினார்கள். இதைத் தொடர்ந்து இவர்கள் யாவரும் ஆதீன சங்கத்தினால் நடத்தப்பட்ட தேநீர் உபசாரனையிற் பங்குபற்றினார்கள் அன்று மாலை 6.00 மணிக்கு ஒட்லி மண்டபத்தில் கலாச்சாரக் கதம்ப நிகழ்ச்சி ஒன்று விருந்தினருக்காக நடத்தப்பட்டது.

மூன்றும் நாள் சாயந்தரக் கருமக் கூட்டத்தில் புதிய ஆண்டிற்கான உத்தியோகத்தர், குழு உறுப்பினர் ஆகியோருக்கான தெரிவுகளும் நியமனங்களும் நடைபெற்றன. அவற்றைத் தொடர்ந்து மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்கள் நடத்திய முடிவுக் கூட்டத்துடன் யாழ். ஆதீனத்தின் 34 ஆம் வருடாந்தக் கூட்டங்கள் நிறைவெய்தின.

# கி. பி. ஆண்டு 2000

[தெ. இ. திருச்சபை, யாழ். ஆதீனத்தின் 34 ஆம் வருடாந்தக் கூட்டத்தில் அத்தியட்சர் மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்கள் நிகழ்த்திய தலைமைப் பேருரையின் சாரம்.]

எனது உரைக்குத் தலையங்கம் போடுவதாயின் கிறிஸ்துவுக்குப் பின் ஆண்டு இரண்டாயிரத்தை எதிர்நோக்கிச் செல்லுதல் எனலாம். கி. பி. 2000 ஆண்டிற்கு முன்னுள்ள இரு பத்தாண்டுப் பிரிவுக்குள் வந்துள்ள நாம் அந்த ஆண்டை நோக்கிச் செல்லும்போது, "அதிலே என்னத்தைப் பெற்றுக்கொள்வதை எதிர்பார்க்கிறோம்? அதற்காக என்னென்ன திட்டங்களைப் போட்டுச் செயலாற்றுகிறோம்?" என்ற கேள்விகளைக் கேட்க வேண்டியவர்களாவோம். கி. பி. 1000 ஆன ஆண்டைக் கண்ட நம் முன்னோரைப் போல வாழவும் செயலாற்றவும் போகிறோமா? அல்லது இன்னும் மேலான சிலவற்றை நாடுவோமா?

இருபதாம் நூற்றாண்டின் இக்கடைசி வருடங்களை நாம் பார்க்கும்போது, அரசியல் சம்பந்தமாக, மூன்றாம் உலக நாடுகளின் தோற்றம் வளர்ச்சியானவற்றைக் காண்கிறோம். உலக சனத்தொகையில் மூன்றில் இரண்டு பாகத்தைக் கொண்டுள்ள இந்த நாடுகளின் மேல் வல்லரசுகள் இனித் தம் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் செலுத்த முடியாது. மூன்றாம் உலக நாடுகளான இவ் வளர்முக நாடுகளில் நம்மதும் ஒன்றாகும்.

மூன்றாம் உலக நாடுகளென்பதுபோலக் கிறிஸ்தவர்களாகிய நாம் மூன்றாம் திருச்சபை எனக் கூடிய ஒன்றைக் குறித்தும் சிந்திக்கலாம். முதலாம் சபையான ஆதிச் சபையைத் தொடர்ந்து, சபைச் சீரமைப்புக் காலங்களோடு அடுத்து வந்த இரண்டாம் சபை, இளைய சபைகள் அல்லது மிஷனரி சபைகள் என நம் காலத்திற் கண்ட, நாமறிந்த, சபைகளை விருத்திபண்ணியது. வருங்காலவியல் நிபுணர் தற்காலச் சபைகளிற் காணும் நிலைகளை ஆராய்ந்து, கி. பி. ஆண்டு இரண்டாயிரத்தில் முதற் சபையும் இரண்டாம் சபையும் பரவியிருக்கும் நாடுகளின் சபையினர் தொகை சுமார் 8,000 இலட்சமாயும் அதேவேளையில் வளர்முக நாடுகளின் சபைகளான மூன்றாம் திருச்சபையின் சனத்தொகை பத்தாயிரம் இலட்சத்திற்கும் மேலானதாயிருக்குமெனக் கணக்கிட்டுள்ளனர்.

நமது அயல் நாடாகிய இந்தியாவிலே, கடந்த (1971) கணக்கெடுப்பின்படி 2·6 இல் இருந்த கிறிஸ்தவர் தொகை விகிதம் கி. பி. 2000 இல் 3 வீதத்திற்கும் அதிகமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதிலும் மேலான வளர்ச்சியையும் விருத்தியடைதலையும் ஆபிரிக்க நாடுகளின் சபைகளிற் காண்கிறோம். பிரதானமாக மூன்றாம் உலக நாடுகளில் இந்த மூன்றாம் திருச்சபையானது பெலம் மிகுந்த ஒரு ஸ்தாபனமாயிருக்குமென்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வகையாக மாறும் நிலைகளினால் என்ன ஆகும்?

1. பழமைமிகுந்த(?) பண்பாடுடைய இந்நாடுகளில் பரம்பி வரும் திருச்சபையானது அப் பண்பாடுகளுடன் ஒன்று சந்திப்பதினால் திருச்சபையின் கொள்கைகள் கோட்பாடுகளிலும் ஒரு புதிய திருப்பம் உண்டாக நேரிடும்.

2. உலக சனத் தொகை சம்பந்தமாக, வரும் இந்த இரு பத்து ஆண்டுகளிலும் 15 தொடக்கம் 30 வரையிலான வயதுடையோர் தொகை விகிதாசாரப்படி, மற்றைய வயதுப் பிரிவினரிலும் பார்க்கக் கூடியதாயிருக்கும். எனவே மூன்றாம் திருச்சபையானது சபை ஆளுகைத் துறையிலும் தலைமைப் பதவிகளிலும் இந்த இளம் சந்ததியாருக்கு எந்தளவு பங்கு கொடுக்கலாமெனச் சிந்திக்க வேண்டியதாகும். மாற்றங்களின் மூலம் நன்மையே வரும் என்பதைத் தம் குறிக்கோளாய்க் கொண்டிருக்கும் இந்த இளம் சந்ததியாரின் முற்போக்கு முயற்சிகளை நாம் ஆதரிப்போமா — இல்லையேல் அவற்றிற்கு முட்டுக்கட்டை போடுவோமா?

3. கி. பி. 2000 இல் திருச்சபை உலகச் சபையாயிருக்கும் — அதுவும் வறியவரின் சபையாயிருக்கும். அவர்களின் பலன் பணத்திலும், ஆதனச் சொத்துக்களிலும், பெரும் கட்டடங்களிலும் தங்கியிராது. தமது ஊழியத்தைக் குறித்து ஆண்டவர் ஏற்கெனவே விடுத்திருந்த கொள்கையறிக்கையின்படி தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்; இருதயம் நொருங்குண்டவர்கள் குணமாக்கப்படுவார்கள்; சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையும் குருடருக்குப் பார்வையும் பிரசித்தப்படுத்தப்படும். இப்பேர்ப்பட்ட சபையின் பெலன் மனிதருக்காகச் சிலுவையேறித் தம்முயிர் கொடுத்த ஆண்டவரின் விசுவாசத்திலும் அவரது சுவிசேஷத்தின் நம்பிக்கையிலுமே தங்கியிருக்கும்.

இஃதிவ்வாறாயின் நமது கரிசனை என்னத்தைப் பற்றியதாய் இருக்க வேண்டும்? நமது இலக்கு எதுவாக வேண்டும்? ஓர் ஆதீன சங்கமாக நாம் ஏன் இங்கே கூடியிருக்கிறோம் எனக் கேட்கப்பட்டால், ஒரு பராமரிப்புக் குழுவினரைப் போல நமது சபைகள் செவ்வையாக நடைபெறுகின்றன; நமது வருவாய்கள் குறையாமல் இருக்கின்றன என்பது போன்ற காரியங்களைக் கவனிப்பதற்காகவே என்று ஒருவேளை நாம் கூறுவோமாக்கும். அப்படியாயின் ஒரே இடத்தில் நின்றவாறே செவ்வையாக வேலை செய்துகொண்டிருக்கும் ஒரு சிற்றூர்தி யந்திரத்திற்கு நமது சபைகள் ஒப்பாகும். சபையின் நோக்கம், இலக்கு அதுவல்ல. சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என ஆண்டவர் தமது சீடரைப் பணித்தார். அந்தப் பன்னிரண்டு பேரும் அதைக் கரிசனைக்கெடுத்தார்கள். ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும் தமது மனக் கண்களிலே கண்டவர்கள், அந்த இலட்சியம் நிறைவேறத் தாம் அழைக்கப்பட்டதை உணர்ந்து செயலாற்றினார்கள். அதே பணிப்பே இப்பொழுதும் திருச்சபைக்கு வந்து கொண்டிருக்கிறது. சபையின் வாழ்க்கை அதன் வளர்ச்சியே எனக் கண்ட ஆதிச்சபை அவ்வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்தது போலத் திருச்சபை இப்போதும் தன்னை அர்ப்பணிக்க வேண்டியிருக்கிறது.

இந்த அழைப்பை ஏற்பதில் இரண்டு அபாயங்களை நாம் தவிர்க்க வேண்டும். வரலாறு தந்த அனுபவங்களை மறந்து யாவும் புதியவற்றையே நாடுவோமானால் சரித்திரார்த்தமான அத்திபாரமற்ற ஒரு கற்பனை உலகிற்குள் நாம் புகுந்து விடக்கூடும். மற்றப்பக்கமாக, சரித்திரத்தைத் தழுவினவர்களாய் மாத்திரம் நாம் செயலாற்றத் தொடங்கினால் அதனாற் சிறைப்படுத்தப்பட்டவர்களாவோம். இவ்விரண்டு அபாயங்களையும் நாம் தவிர்த்துப் பழமையானவைகளை அறவே புறக்கணிக்காமலும் புதியவைகளைக் கையேற்க ஆயத்தமுள்ளவர்களாகவும் செயலாற்ற நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இவற்றினால் நமது யாழ்ப்பாண ஆதீனம் கற்க வேண்டியதென்ன? நாம் எப்போதும் சுமார் 28 சபைகளடங்கிய ஒரு சிறிய ஆதீனமாய் இருக்க வேண்டுமா? கி. பி. 2000 நமது ஆதீனத்தில் 50 சபைகளைக் காணக் கூடாதா? அங்கத்தவர் எண்ணிக்கை ஐயாயிரத்திலிருந்து பன்னீராயிரம் அல்லது பதினையாயிரமாய் ஏன் அதிகரிக்கக் கூடாது? இதுவே நமக்கு முன் வைக்கப்படும் மகத்துவமான ஒரு சவால். ஆண்டுக்கு ஒரு சபையையாவது நாம் உருவாக்க முன்வர வேண்டும். ஆண்டு 2000 இல் நின்றுகொண்டு இந்த ஆண்டைப் பார்ப்பவர்கள், "1981 ஆம் ஆண்டில் கூடிய ஆதீன சங்கம் இன்னும் உயரிய நோக்கத்தைக் கொண்டிருந்தால் அதிலும் வெற்றி பெற்றிருக்குமே!" என வியக்கக் கூடியதாய் நாம் இப்பொழுதே செயலாற்ற அழைக்கப்படுகிறோம். இதற்காகத் தமது ஆவியின் வழிநடத்துதலையும் பெலனையும் ஆண்டவர் நமக்கு அருளுவாராக.

## புதிய உத்தியோகத்தர்

தெ. இ. திருச்சபை யாழ். ஆதீனத்தின் 34 ஆம் வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் 1981 ஆம் ஆண்டிற்கான உத்தியோகத்தராய்த் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளர்:- கனம் Sam தம்பு.

பொருளாளர்:- திரு. S. S. செல்வத்துரை.

நிர்வாகக் குழு — காலியான இடங்கள்:- கனம் S. P. ஜெயசிங்கம், டக்ரர் J. S. நவரத்தினம்.

வைத்தியப் பரிபாலனக் குழு — காலியான இடங்கள்:- டக்ரர் P. அருளானந்தம், கலாநிதி J. B. செல்லையா, டக்ரர் K. சந்திரபால்.

பண நிர்வாகக் குழு:- கனம் T. S. பிரேமராஜா.

*பிரதிநிதிகள்*

தேசிய கிறிஸ்த சங்கம்:- கனம் S. S. அருளம்பலம், திரு. M. R. செல்வராஜா.

வேலூர் வைத்தியக் கல்லூரி:- அத்தியட்சர் அவர்கள், டக்ரர் திருமதி R. G. செல்வத்துரை.

யாழ்ப்பாணக் கல்லூரி நடத்துனர் குழு:- அத்தியட்சர் கலாநிதி ச. குலேந்திரன்.

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்:- கனம் N. W. G. சுகுணராஜா, திரு. A. செல்வநாயகம்.

யாழ். கல்லூரி தொழில் நுட்பப் பயிற்சி நிலையம்:- திரு. M. ஜெயபாலன்.

ஐக்கியத் திருமறைக் கல்லூரி:- அத்தியட்சர் அவர்கள், திரு. A. கதிர்காமர்.

சமய சமூக ஆய்வுக் கழகம்:- கனம் D. R. அம்பலவாணர்.

சினட் மகாசபை—குருமார்:- கனம். D. R. அம்பலவாணர், கனம். S. S. அருளம்பலம்.

அதிட்சதர்:- திரு. S. S. செல்வத்துரை, திரு. J. M. சபாரத்தினம், திரு. A. இராஜசிங்கம், செல்வி C. V. செல்லையா,

*நியமனங்கள்*

உடுவில் மகளிர் கல்லூரி முகாமையாளர்:- திரு. S. S. செல்வத்துரை.

உதயதாரகை:- ஆங்கிலப் பகுதிப் பத்திராசிரியர்:- திரு. C. E. இராஜசிங்கம், உதவிப் பத்திராசிரியர்:- கனம் S. N. சுகுணானந்தன்.

தமிழ்ப் பகுதிப் பத்திராசிரியர்:- கனம் N. W. G. சுகுணராஜா, உதவிப் பத்திராசிரியர்:- திரு. S. ஜெயதேசன்.

## அமைதி

அமைதி மனிதனுக்கு இயற்கையாயுள்ள இன்பநிலை. போர் அவனுக்கு இழிவு, அவமானம்.
— தாம்ஸன்.

அமைதி மதிப்புயர்ந்த ஒரு நகை. சத்தியத்தைத் தவிர வேறு எதைக் கொடுத்தாவது நான் அதை வாங்க விரும்புகிறேன்.
— எம். ஹென்றி.

பகைகொள்ளல் எனக்கு மரணம் போன்றது; நான் அதை வெறுக்கிறேன், எனக்கு நல்லார் அனைவருடைய அன்பும் தேவை.
— ஷேக்ஸ்பியர்.

அமைதியா யுள்ளவர்களுக்கு அமைதி மறுக்கப்படுவதில்லை.
— ஷில்லர்.

உன்னைத் தவிர உனக்கு அமைதியை வேறு எதுவும் கொண்டு வர முடியாது; தத்துவங்களின் வெற்றியாலேயே அமைதி ஏற்படும். — எமர்ஷன்.

அமைதிக்கும் வெற்றிகள் உண்டு. அவை போரின் வெற்றிகளைவிடப் புகழில் குறைந்தவை அல்ல. — மில்டன்.

அமைதியே கலைகளை வளர்த்து, செழிப்பை உண்டாக்கி, இன்பமான புத்துயிரளிக்கும் செவிலித்தாய். — ஷேக்ஸ்பியர்.

போருக்கு ஆயத்தமாயிருத்தல் அமைதியைக் காக்கத் தலைசிறந்த வழியாகும். — வாஷிங்டன்.

நான் அமைதியான மனிதன். அமைதியை நான் எவ்வளவு விரும்புகிறேன் என்பதை ஆண்டவர் அறிவார். ஆனால் நான் கொடுமையைக் கண்டு அதுவே அமைதி என்று தவறாகக் கருதும் கோழையல்லன். — கோலத்.

## பத்திராசிரியர் குறிப்பு

"உதயதாரகை" யில் வெளியிடுவதற்குத் தரம் வாய்ந்த கட்டுரைகள், கவிதைகள், செய்திகள் எழுதி அனுப்புங்கள். பிரசுரிக்கப்படாதவற்றைத் திருப்பிப் பெற விரும்புவோர் தயவு செய்து விலாசமிடப்பட்ட உறை அனுப்புங்கள்.

வேத வினா-விடைப் போட்டி — உதயதாரகையில் வெளியாகிறது. புத்தகப் பரிசு வழங்கப்படும். விபரங்களுக்கு அடுத்த வாரப் பத்திரிகையைப் பார்க்கவும்.

ப—ர்,
குருமனை,
உடுவில், சுன்னாகம்.

*EDITORIAL*

## Perspectives

If there was an Annual Sessions of the Jaffna Diocesan Council of the Church of South India, which helped its 69 delegates (including clergy) and 12 Honorary members to see certain things sharp and plain in our Christian nurture, the 34th Annual Diocesan Council which concluded its sittings at Vaddukoddai on 28-2-81, could be reckoned as one.

The "maintenance jobs" of the various institutions did receive attention as in previous years but it was not given undue focus at the sessions nor did it consume the larger part of the time.

There was also not much quibbling over sophisticated methods of financing or wrangling over increased Church 'quotas' which Churches were asked to give, in the context of the inflation spiral.

What the delegates were made to feel from the programme drawn up by the Executive Committee was that what was really in sharp focus at the Sessions was not so much the 'business' as the perspectives. The reasons for this change in emphasis are obvious.

Conventional middle class Christianity with its conformity, prudery, loss of verve and courage has been one of the chief causes for the alienation of our youth whose confidence *today* is essential for recapturing the new generation of the Church.

We have stumbled into the Eighties, as the WCC Director for Communication has recently pointed out, with "a runaway arms race, growing political repression, rampant materialism and economic injustice." The last three of these in particular we have witnessed very much in Asian countries. In this backdrop, a purely business session of a Church Council would have made little sense unless it was supplemented by a programme of study which seeks to see people today at close range.

Religion and revolution is for instance 'a volatile mixture' today in Nicaragua. The Nicaruguan Christians, as we know. have thrown their weight behind the popular insurrection to oust the brutal dictatorship of Somoza from the country.

The statement issued by the Sandinista National Liberation Front (FSLN) is bold and unfaltering :—

> "Our experience shows that when Christians basing themselves on their faith, are capable of responding to the needs of the people and of history, those very beliefs lead them to revelutionary activism."

It is undoubtedly a happy sign that our Churches even at the village level are well organised. There are regular services.. Attendance at these services is generally good and giving to the Church has increased.

But beyond these naive fundamentals lie the need for a ferociousness of purpose to base our religion on *realities*.

One such reality which we as a Church have to reckon with in the years ahead, is that *one billion of the World's 1.3 billion children live in developing countries.* We have "to see the Kingdom in the face of these children."

Bringing into sharp focus the poignancy of some of the realities in developing countries contemporary Japanese Theologian, Kosuke Koyama says that the prayer 'your Kingdom come' is really inherited from Israel.

*It is not a cheap prayer.* It was a prayer offered by the Jews through the catastrophe ef the holocaust in recent history.

Today when we are saying this prayer, we do so, says the learned theologian, after Auschwitz and the Cambodian genocide.

The ultimate test of our faith is whether, when the challenge comes we are prepared to stand up and be *counted.*

We have read recently of this sign put up in a Church vestibule. *"If you were on trial for being a Christian, would there be enough evidence to convict you."*

"Your Kingdom Come" has a history of suffering. It is good that we are reminded of this truth as we enter this week into the season of Lent.

## Non-Aligned Conference want Afghanistan and Kampuchea Free of Foreign Forces

The meeting of the Foreign Ministers of non aligned countries held in New Delhi last week in its joint declaration condemned the presence of foreign forces in Afghanistan and Kampuchea. The foreign minister of Afghanistan opposed it on the grounds that it was a dangerous precedence of interference into the internal matters of a nation. The debate on this final document was long and keen.

## Corrections

We regret the following errors in the Editorial section "Third World and the Third Church" that appeared in our issue of 27-2-1981.

Under the paragraph "The New Surge" read South America in place of North America.

Under the Section "Our Goals" read "5000 to about 12000 or 15000 by the end of this Century."

## William Mather Memorial Women's Centre
### Maruthanamadm

"How excellent is thy loving kindness. O God! therefore the children of men put their trust under the shadow of thy wings."

In 1941, the the Rev. B.C.D. Mather handed over to the Girl's Education Board of the American Ceylon Mission, the orphanage which had been founded by his father, the late Mr. Edward Mather, in memory of his own father Mr. William Mather. In 1944 the Women Centre was set up as an interdenominational institution under the able guidance of Mrs. L. G. Bookwalter as manager. The centre was to be a haven for less previleged girls, to have a home where they could learn a craft and thus be self supporting.

This venture of faith has had from the beginning generous support both from our own community and from friends and organizations abroad.

Looking back at this period of 43 years, the centre has progressed and we have branched into a three phased activity.

(1) The work for the Girls — weaving, agriculture, poultry and needle work. The textile production is good and we have standing orders, so we are pressed to find the yarn and sufficient number of good weavers. Our difficulty has been that the girls after having masterid the art leave for more lucarative jobs in power looms. and we have to train others to take their place. We make sarees, sarongs, table mats, shoulder bags and household linen.

In May 1979, the Governing Board decided to start a Girls' Home We started with 17 children and now the number has arisen to 60. Most of the children are orphans or semi-orphans and come from low income groups. The West German Association Kindernothilfe is giving us fostership aid. We are trying to help these children not only by sending them to school but by helping them to learn various activities, music, art handwork etc.

(3) The elders who have made their home with us are three in number. They form part of our community. There are many requests, but we have refused because we are unable to give them the basic comforts. We are hoping to do something along this line sometime during this year.

In our community we have 90 persons, we live, eat, work and worship together though our ages range from 6 to 75.

The beginning of 4th decade of our history, we wish to invite you all to participate in our annual Festival on the 14th of March. We hope to begin the 41st year with Faith in God and faith in you. Hope you will join us help make others happy and together let us go forward attempting great things for God.

## Nuffield School Celebrates Silver Jubilee

On Friday the 20th Fepruary 1981 the Nuffield School for the Deaf and the Blind celebrated the 25th Anniversary of their founding. The day's programme began with a Service of Thanksgiving in the school hall led by the Rev. Issac Selvaratnam along with clergy of other Churches. The children of the school participated enthusiastically. At the end of the service the clergymen who participated laid hands on the principal Mr. Jeyasingh David and the Bishop the Rt. Rev. D. J. Ambalavanar offered a prayer of blessing on him. A meeting followed in the same hall chaired by the manager of the school Mr. K. Nesiah when felicitations and good wishes from friends, parents and representatives of other service organizations were conveyed to the school. The Bishop then blessed the new uquipment which the school had acquired for teaching deaf children and declared open a new building erected for the blind. All the guests joined the school at a fellowship lunch at the end of the ceremony.

*Uduvil Church*

## Mrs. T. W. Thambiyappah

We regret to record the death which occurred at her residence at Uduvil on Saturday (21-2-81) of Harriet Manikkam Thambyappah (88), relict of the late Mr. Tenant Thambyappah of Uduvil.

The Funeral Service at her residence was conducted by the Rev. N. W. G. Sugunarajah with whom were associated Canon V. S. D. Sathianandhan and Sevak Sam Alfred. Rev. D. R. Ambalavanar and Rev. A. C. Thambirajah paid tributes to the life of the deceased.

She leaves behind her daughters — Pavalaranee, Pakkiaranee and Jeyaranee, her grand daughter Sahuntala Nesadurai and a very large circle of relations to whom her departure has meant a break in a link which they had cherished for many long years.

*Obituary*

## Mrs. A. M. Thevathason

The death occured on the 16th of February at her son's residence in Colombo of Mary Gnanapuranam Thevathasan relict of the late Mr. A. M. Thevathasan (Retired Telecommunication Engineer). The funeral service which took place the next day was conducted by the Rev. M. A. Ratnarajah assisted by the Rev. Duleep Fernando. Her remains were cremated at Kanatte. The ashes were bought to Udupiddy, interred beside her late husband on the 22nd February, after a short service by the Rev. D. C. Ratnasingham.

She leaves behind a son, four daughters to mourn her loss.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100/25/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 6th March, 1981.